## கற்றல் ஊக்கி - 01

பாடம் :- வரலாறு

தரம் :- 11

அலகு :- 01

**அறிவுறுத்தல்கள்**

- ❖ வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.
- ❖ தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

**Aaruthal** Sri Lanka

000005760

## 2017 - தவணை - 01

| பரீட்சையாளரின் பாவனைக்கு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதி | A | | | | B | | | | | மொத்தப் புள்ளி |
| வினா எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 15 | 15 | 100 |
| பெற்ற புள்ளி | | | | | | | | | | |

# கைத்தொழில் புரட்சி

## பகுதி - A

1) **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

01) ஐரோப்பாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்டமைக்கான பிரதான காரணம்
(1) வர்த்தக வளர்ச்சி (2) சனத்தொகை அதிகரிப்பு
(3) மறுமலர்ச்சி வளர்ச்சியடைந்தமை (4) சமய மறுமலர்ச்சி

02) பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட நூற்றாண்டு
(1) 17ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதி
(2) 17ம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதி
(3) 18ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதி
(4) 18ம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதி

03) குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றுவதில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய நாடுகளின் தொகுதி
(1) பிரான்ஸ், ஜேர்மனி, போர்த்துக்கல், ஒஸ்ரியா
(2) பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து
(3) பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், பின்லாந்து
(4) ஜேர்மனி, டென்மார்க், பெல்ஜியம், ஒஸ்ரியா

04) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்ட நூற்றாண்டு
(1) 13 ஆம், 14 ஆம் நூற்றாண்டு (2) 12 ஆம், 13 ஆம் நூற்றாண்டு
(3) 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டு (4) 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டு

05) கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட காலத்தில் இரும்பினை உருக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருள்
(1) நிலக்கரி (2) நிலநெய் (3) நீர்மின்வலு (4) காற்று

06) பிரித்தானியாவின் பருத்தித்துணிக்கு அதிகளவு கேள்வி காணப்பட்ட ஆசிய நாடு
(1) இந்தியா (2) இலங்கை (3) சீனா (4) ஜப்பான்

07) பிரித்தானியா ஒரு
(1) குடாநாடு (2) தீவு
(3) நிலத்தால் சூழப்பட்டநாடு (4) மேட்டுநிலம் ஆகும்.

08) கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட காலத்தில் மூலப்பொருள், மூலதனம், முடிவுப் பொருட்களை விநியோகித்த பிரித்தானியாவின் மத்திய நகரம்
(1) ஷெவீல்ட் நகரம் (2) பேர்மிங்காம் நகரம்
(3) லண்டன் நகரம் (4) யோக்சயர் நகரம்

09) 1773ம் ஆண்டு பறக்கும் நூனாழியைக் கண்டுபிடித்தவர்
(1) ஜோன்கே (2) ரிச்சட் ஆக்ரைட்
(3) சாமுவெல் கொம்டன் (4) ஆபிரகாம் டர்பி

 Copyright © Aaruthal 2017 ஊக்கி - 01

10) 1764 ஆம் ஆண்டு ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட நூல் நூற்கும் இயந்திரத்தின் பெயர்

(1) நூனாழி (2) மிஜெல் (3) மியூஸ் (4) ஜெனி

(10 புள்ளிகள்)

**2) புள்ளிக்கோட்டில் வரவேண்டிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) பிரான்ஸ் போன்ற நாடுகளில் சனத்தொகை வளர்ச்சியடைந்திருந்த போதும் பிரித்தானியாவுடன் ஒப்பிடும் அளவிற்கு வர்த்தகம் வளர்ச்சியடையாமைக்கான காரணம் ......................

(1) தூரநோக்கற்ற அரச கொள்கை
(2) வளங்களின் பற்றாக்குறை
(3) பிரித்தானியாபோல் பிரான்ஸ் தீவாகக் காணப்படாமை
(4) மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப குடியேற்ற நாடுகள் காணப்படாமை

02) பிரித்தானியாவில் புதிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கு. ................................ பின்னணி காரணமாக அமைந்தது

(1) சிலுவை யுத்தம் முடிவடைந்தமை
(2) நிலஅடைப்பு இயக்கம் ஏற்பட்டமை
(3) சுதந்திரமான சமூக பொருளாதாரம் ஏற்பட்டிருந்தமை
(4) கிராமிய விவசாயிகள் நகர்புறத்தில் குடியேறியமை

03) ‘ஜெனி’ இயந்திரம் ........................................................................ ஆல் இயக்கப்பட்டது.

(1) நிலக்கரி (2) நீர்மின் (3) கை (4) காற்று

04) ஆசியாவில் முதன்முதலாக குதிரை வண்டிகள் மூலம் தபால் விநியோகிக்கும் முறை ஆரம்பமான நாடு ........................................................................................ ஆகும்.

(1) இந்தியா (2) ஜப்பான் (3) பர்மா (4) இலங்கை

05) 1804 ஆம் ஆண்டு இலங்கையில் கோப்பி விதைகளைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை ஆரம்பித்த ஆளுனர் ................................

(1) ரோபட் பிறவுண்றிக் (2) பிரடிக் நோர்த்
(3) தோமஸ் மெயிற்லன்ட் (4) எட்வேட் பாண்ஸ்

06) ஆளுனர் எட்வேட் பாண்ஸின் காலத்தில் இலங்கையில் அமைக்கப்பட்ட பிரதான வீதி ...............

(1) கண்டி – கொழும்பு (2) கொழும்பு – குருநாகல்
(3) கண்டி – யாழ்ப்பாணம் (4) கண்டி – குருநாகல்

07) இலங்கையில் புகையிரதப் பாதைகள் அமைப்பதில் ஈடுபட்ட பிரித்தானிய ஆளுனர் ................

(1) எட்வேட் பாண்ஸ் (2) றொபேட் பிறவுண்றிக்
(3) வில்லியம் ஹிரகரி (4) ஹென்றிவோட்

08) இலங்கையில் 1858 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1863 ஆம் ஆண்டு முடிவடைந்த புகையிரதப் பாதை

(1) கொழும்பு – அம்பே புஸ்ஸ (2) கண்டி – கொழும்பு
(3) கண்டி – யாழ்ப்பாணம் (4) கொழும்பு – யாழ்ப்பாணம்

09) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட தீய விளைவு ............................

(1) சனத்தொகை அதிகரித்தது
(2) தொழிலாளர் தொகை அதிகரித்தது
(3) சூழல் மாசடைந்தது
(4) கல்வி அறிவு வீதம் குறைவடைந்தது

10) 1858 ஆம் ஆண்டு இலங்கையில் ........................................................ மூலம் செய்தி பரிமாறும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது

(1) தபால் (2) குதிரைவண்டி (3) தந்தி (4) மரதன் ஓட்டம்

(10 புள்ளிகள்)

3) அட்டவணையில் தரப்பட்டுள்ள A – I வரையான தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| கண்டுபிடித்தவர் | ஆண்டு | பயன் |
|---|---|---|
| A- ஆபிரகாம் டர்பி | D- 1784 | G- இரும்பில் இருந்து கழிவுகளை அகற்றல் |
| B- ஹென்றிகோட் | E- 1856 | H- நிலக்கரி மூலம் இரும்புத்தாது உருவாகுதல் |
| C- ஹென்றி பேஸ்மர் | F- 1730 | I- பதப்படுத்தப்பட்ட இரும்பு உற்பத்தி |

01) வார்ப்பு இரும்பை உற்பத்தி செய்வதுடன் தொடர்புடைய விடைத் தொகுதி
(1) AEH (2) AFH (3) CHI (4) BEG

02) இரும்பு உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட ரோலர் இயந்திரத்துடன் தொடர்புடைய விடை
(1) BDI (2) ADH (3) AFH (4) BFH

03) உயர்தரத்திலான உருக்கை உற்பத்தி செய்வதற்கு அடிப்படையாக அமைந்த கண்டுபிடிப்பு
(1) AEG (2) BFG (3) CEG (4) CDI

❖ கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

A - நீராவி இயந்திரம் B – ஆகாய விமானம்
C - மெக்டம் முறை D - மோட்டார் வண்டி
E - தொலைபேசி F - வானொலி

04) போக்குவரத்துத்துறையுடன் தொடர்பான விடைத் தொகுதி
(1) ACD (2) BDF (3) CDE (4) BCD

05) தொடர்பாடலுடன் தொடர்புடைய விடைத் தொகுதி
(1) AE (2) EF (3) DE (4) BC

06) எல்லாக் கைத்தொழிலின் விருத்திக்கும் காரணமாக அமைந்த கண்டுபிடிப்பு
(1) F (2) E (3) B (4) A

07) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்
(1) மார்க்கோணி (2) அலெக்சாண்டர் கிரகம்பெல்
(3) டெம்லர் (4) ஜோன் லொகிபெயாட்

08) 1840 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தபால் சேவை
(1) பெனிதபால் சேவை
(2) குதிரைவண்டி தபால் சேவை
(3) தந்திசேவை
(4) கேபிள் கம்பியூடாக வாய்மொழியாக கருத்தைப் பரிமாறிக் கொள்வது

09) 1844 ஆம் ஆண்டு தந்தி முறையைக் கண்டறிந்தவர்
(1) ஜோன் லொகிபெயாட் (2) ஜோர்ஜ் ஸ்டீவன்சன்
(3) சாமுவெல் மோஸ் (4) நியூ கொமன்

10) ஜென் ரோட்டல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட விடயம்
(1) ஓர் பூட்டப்பட்ட குதிரைகள் மூலம் வரிசையாகப் பயிரிடும் முறை
(2) செம்மறி ஆடுகளின் இனப்பெருக்கம் தொடர்பான புதிய கண்டுபிடிப்பு
(3) குவானோ உரத்தின் பயன்பாடு
(4) தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களை இலகுவாகக் கொண்டு செல்லும் முறை

(10 புள்ளிகள்)

4) பின்வரும் கூற்றுக்களை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை தருக.

A - பணக்கார வகுப்பினர் உருவாகினர்

B - ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமுறை ஏற்பட்டது

C - பாரிய நகரங்கள் வளர்ச்சியடைந்தது

D - ஏழைவகுப்பினர் உருவாகினர்

E - தொழிலாளரின் உரிமைப் போராட்டங்கள் ஏற்பட்டது

F - கூட்டு வர்த்தகக் கம்பனிகளின் உருவாக்கம்

G - சேரிப்புறங்கள் உருவாக்கப்பட்டது

01) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதி
(1) ADE (2) ACG (3) ADB (4) ADG

02) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி
(1) AF (2) BF (3) BE (4) AC

03) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட சமூக மாற்றங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி
(1) DE (2) AC (3) CG (4) BC

❖ கீழ்வரும் A, B ஆகிய கூற்றுக்களை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்குக

A - பொதுவுடமைவாதம், தாரான்மைவாத எண்ணக்கரு

B - ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரம்

04) கைத்தொழிற் புரட்சியினால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றத்துடன் தொடர்புடைய கூற்று
(1) A சரி B தவறு (2) A தவறு B சரி
(3) A யும் B யும் தவறு (4) A யும் B யும் சரி

05) அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றம்
(1) A தவறு B சரி (2) AB யும் தவறு
(3) AB யும் சரி (4) A சரி B தவறு

06) 1800 ஆம் ஆண்டில் குவானோ உரத்தினை உற்பத்தி செய்த நாடு
(1) பிரித்தானியா (2) ஜப்பான் (3) பிரான்ஸ் (4) தென்னாபிரிக்கா

07) 19ஆம், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கைத்தொழிற் துறையில் வளர்ச்சி யடைந்திருந்த ஒரே ஒரு ஆசிய நாடு
(1) ஜப்பான் (2) இந்தியா (3) சீனா (4) சிங்கப்பூர்

08) முதலாளித்துவம் என்னும் எண்ணக்கரு உலகம் முழுவதும் பரவும் வகையில் அரசின் தலையிடாக் கொள்கையை முன்வைத்த அறிஞர்
(1) மாஓசேதுங் (2) கால்மார்க்ஸ் (3) அடம்ஸ் சிமித் (4) மார்டின் லூதர்

09) பிரித்தானியாவில் நிலக்கரிப் படிவுகள் அதிகம் காணப்படும் பிரதேசங்கள்
(1) தென்வேல்ஸ், யோக்சயர், லங்காசயர்
(2) தென்வேல்ஸ், ஷெவீல்ட், யோக்சயர்
(3) பேர்மிங்காம், லங்காசயர், ஷெவீல்ட்
(4) பேர்மிங்காம், லண்டன், ஷெவீல்ட்

10) தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர்
(1) மார்க் கோணி (2) தோமஸ் அல்வா எடிசன்
(3) ஜோன் லொகிபெயாட் (4) ஜோர்ஸ் ஸ்டீவன்சன்

(10 புள்ளிகள்)

## பகுதி - B

5) தரப்பட்ட உலகப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

1) பிரித்தானியா
2) பிரான்ஸ்
3) ஜேர்மனி
4) ஒஸ்ரியா
5) ஒல்லாந்து
6) போர்த்துக்கல்
7) ஸ்பெயின்
8) பெல்ஜியம்
9) ஜப்பான்
10) இந்தியா

(10 புள்ளிகள்)

6) தரப்பட்ட உலகப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

1) லண்டன்
2) பாரீஸ்
3) தென்னாபிரிக்கா
4) இலங்கை
5) ஐக்கியஅமெரிக்கா
6) போலாந்து
7) சீனா
8) ஹங்கேரி
9) வடகடல்
10) ஆங்கிலக் கால்வாய்

(10 புள்ளிகள்)

7) **சுருக்கமான விடை தருக.**

1) நில அடைப்பு இயக்கம் என்றால் என்ன?

....................................................................................................

....................................................................................................

2) கைத்தொழிற் துறைக்குத் தேவையான மேலதிக ஊழியர்கள் இலகுவாக கிடைத்தமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

....................................................................................................

....................................................................................................

3) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு சாதகமாக இருந்த அரசியல் ரீதியான பங்களிப்பு இரண்டு தருக.

....................................................................................................

....................................................................................................

4) பிரித்தானியாவின் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட அடிப்படைக் கைத்தொழில்கள் இரண்டு தருக.

....................................................................................................

....................................................................................................

5) 20ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உருவான செல்வந்த வகுப்பினரின் இரு பிரிவுகளையும் தருக.

....................................................................................................

....................................................................................................

(10 புள்ளிகள்)

8) 1) கைத்தொழிற் புரட்சி என்றால் என்ன?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(3 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றைக் கண்டுபிடித்த அறிஞர்களின் பெயர்களைத் தருக.

A - புகைப் படகு ..............................................................................................

B - புகைக் கப்பல் ..............................................................................................

4 புள்ளிகள்)

3) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டு குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

(4 புள்ளிகள்)

4) கைத்தொழிற் புரட்சியினால் இலங்கையின் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

(4 புள்ளிகள்)

9) 1) நிலக்கரியை எரித்து அதன் கழிவில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மூன்று பொருட்களைத் தருக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

(3 புள்ளிகள்)

2) கைத்தொழிற் புரட்சியினால் விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு தருக.

..............................................................................................

..............................................................................................

(4 புள்ளிகள்)

3) கைத்தொழிற் புரட்சி பிரித்தானியாவில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................


(4 புள்ளிகள்)


4) இன்று உலகம் முழுவதும் ஒரு பூகோளக் கிராமமாக மாறும் நிலை ஏற்பட்டதற்கு கைத்தொழிற் புரட்சியே வித்திட்டது. இரு காரணங்களைக் குறிப்பிடுக.

..............................................................................................

..............................................................................................

(4 புள்ளிகள்)






Copyright © Aaruthal 2017 ஊக்கி - 01

# தகவல் பத்திரம்

## கைத்தொழிற் புரட்சி

**கைத்தொழிற் புரட்சி**
- ஆரம்பம் - 18ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதி
- நாடு – பிரித்தானியா
- ஏற்படக் காரணம் - வர்த்தக வளர்ச்சி
- பரவிய ஏனைய ஐரோப்பிய நாடுகள்
  - பிரான்ஸ்
  - ஸ்பானியா
  - போர்த்துக்கல்
  - ஒல்லாந்து

**கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட துறைகள்**
- நெசவுக் கைத்தொழில்
- இரும்புருக்குக் கைத்தொழில்
- நிலக்கரிக் கைத்தொழில்

**ஏனைய துறைகள்**
- போக்குவரத்து
- தொடர்பாடல்
- விவசாயம்

**பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஏற்படக் காரணம்**
- வர்த்தக வளர்ச்சி
- விஞ்ஞான வளர்ச்சி
- செல்வந்தர்களின் உருவாக்கம்
- சனத்தொகை அதிகரிப்பு
- உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பு
- ஐரோப்பிய மறுமலர்ச்சி
- இரும்பு, நிலக்கரி போன்ற கனியங்களின் பரம்பல்
- வர்த்தகச் சட்டங்கள்
- ஏனைய நாடுகளுடனான வர்த்தக தொடர்பு
- குடியேற்ற நாடுகளுக்குத் தேவையான பொருட்களின் உற்பத்தி
- பொருட்களுக்கான அதிக கேள்வி
- இயந்திரங்கள் மூலம் குறுகிய காலத்தில் கூடிய பொருட்களின் உற்பத்தி
- மேலதிக ஊழியர்
- பணம் சம்பாதிக்க கூடிய சூழல்
- அரச கொள்கைகள்


Copyright © Aaruthal 2017 ஊக்கி - 01

| இல | ஆண்டு | கண்டுபிடிப்பாளர் | உபகரணம் | துறை |
|---|---|---|---|---|
| 01 | 1773 | ஜோன் கே | பறக்கும் நூனாழி | நெசவு |
| 02 | 1764 | ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ் | ஜெனீ – நூல் நூற்கும் இயந்திரம் | நெசவு |
| 03 | 1769 | ரிச்சட் ஆக்ரைட் | நூல் நூற்கும் இயந்திரம் | நெசவு |
| 04 | 1766 | சாமுவெல் கொம்டன் | மியூல் - நூல் நூற்கும் இயந்திரம் | நெசவு |
| 05 | 1785 | எட்மண்காட் ரைட் | மியூல் - நூல் நூற்கும் இயந்திரம் | நீராவியால் இயங்குவது |
| 06 | 1730 | ஆபிரகாம் டர்பி | நிலக்கரி மூலம் இரும்புத்தாதை உருக்கும் இயந்திரம் | இரும்புருக்கு |
| 07 | 1784 | ஹேனறிகோட் | ரோலர் இயந்திரம் | இரும்புருக்கு |
| 08 | 1856 | ஹன்றி பேஸ்மர் | இரும்புக் கழிவுகளை அகற்றும் இயந்திரம் | இரும்புருக்கு |
| 09 | 1860 | | இரும்பு உலை | இரும்புருக்கு |
| 10 | 1870 | விலியம் சீமன்ஸ் | இரும்புத்தாதை உருக்கக் கூடிய மின் அடுப்பு | இரும்புருக்கு |
| 11 | 1735 | தோமஸ் நீயூகொமன் | சுரங்கத்தில் சேரும் நீரை வெளியேற்றும் குழாய் | நிலக்கரி சுரங்கம் |
| 12 | 1736 | ஜேம்ஸ் வோட் | நீராவி இயந்திரம் | சகல துறைகள் |
| 13 | 1812 | ஹம்பிறிடேவி | பாதுகாப்புவிளக்கு | சுரங்கத்துறை |
| 14 | 1839 | | இரும்புக் கேபிள் | சுரங்கத்துறை |
| 15 | 1811 | ஜோன் மெக்டம் | பெருந்தெருக்களை அமைக்கும் முறை | போக்குவரத்து |
| 16 | 1814 | ஜோர்ச் ஸ்டீவன்சன் | புகையிரத எஞ்சின் | போக்குவரத்து |
| 17 | 1807 | ரொபட் புல்டன் | புகைப் படகு | போக்குவரத்து |
| 18 | 1811 | ஹென்றிபெல் | புகைக் கப்பல் | போக்குவரத்து |
| 19 | 1885 | டெம்லர் | மோட்டார் வண்டி (கார்) | போக்குவரத்து |
| 20 | 1903 | ரைட் சகோதரர்கள் | ஆகாய விமானம் | போக்குவரத்து |
| 21 | 1876 | அலெக்சாண்டர் கிரகம் பெல் | தொலைபேசி | தொடர்பாடல் |
| 22 | 1844 | சாமுவெல் மோஸ் | தந்திமுறை | தொடர்பாடல் |
| 23 | 1895 | மார்கோணி | வானொலி | தொடர்பாடல் |
| 24 | | ஜோன்லொகிபெயாட் | தொலைக்காட்சி | தொடர்பாடல் |
| 25 | | ஜென் ரோட்டல் | ஓர் பூட்டப்பட்ட குதிரை மூலம் வரிசையாகப் பயிரிடும் இயந்திரம் | விவசாயம் |
| 26 | | ரொபட் பெக்வெல் | விலங்கு இனப்பெருக்கம் | விவசாயம் |


Copyright © Aaruthal 2017 ஊக்கி - 01

**கைத்தொழிற் புரட்சி பரவிய ஏனைய நாடுகள்**

- பிரான்ஸ்
- பெல்ஜியம்
- ஜேர்மனி
- ஆஸ்திரியா
- ஹங்கேரி
- பிரஷ்யா
- ஐக்கியஅமெரிக்கா
- ஜப்பான்

**கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்**

- **அரசியல்**
  - பணக்கார, ஏழை வகுப்பினர் உருவாகல்
  - உழைப்பு சுரண்டல்
  - குறைந்த கூலி
  - வாழ்க்கைத்தர குறைவு
  - முரண்பாடு
  - தொழிற்சங்கம் உருவாக்கம்
  - வேலைநிறுத்தம்
  - பொதுவுடைமை தராண்மைவாதம் தோற்றம்
  - குடியேற்ற நாடுகளில் அரசியல் ஆதிக்கம்
- **பொருளாதாரம்**
  - பணக்கார வர்க்கம்
  - வர்த்தக வகுப்பு வளர்ச்சி
  - சிறுநில உடமையாளர் விவசாயத்தைக் கைவிடல்
  - தன்னிறைவுப் பொருளாதாரமுறை வீழ்ச்சி
  - ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரம்
  - உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக வளர்ச்சி
  - முதலாளித்துவ பொருளாதாரப் பரவல்
  - வர்த்தக கம்பனிகள் உருவாக்கம்
  - பல்தேசியக் கம்பனிகளின் உருவாக்கம்
  - வங்கி நடவடிக்கைகள்
- **சமூகம்**
  - நகர உருவாக்கம்
  - வேலைவாய்ப்பு
  - வாழ்க்கைத்தர உயர்வு
  - நகரங்களில் சனத்தொகைப் பெருக்கம்
  - நகரங்களில் அடிப்படை வசதி குறைவு
  - சேரி உருவாக்கம்
  - உழைக்கும் வர்க்கம் பாதிப்படைதல்


Copyright © Aaruthal 2017 ஊக்கி - 01

**கைத்தொழில் புரட்சியால் இலங்கையில் ஏற்பட்ட செல்வாக்கு**

- பெருந்தோட்ட உற்பத்தி
- இயந்திரப் பயன்பாடு
- தொழிளாளர் வர்க்கம் தோற்றம்
- செல்வந்த கல்வி கற்ற மத்தியதர வர்க்கம் தோற்றம்
- ஏற்றுமதி, இறக்குமதி, பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது.
- வங்கிமுறை ஏற்பட்டது.
- போக்குவரத்து வளர்ச்சியடைந்தது.
- நகரங்கள் வளர்ச்சியடைந்தது.
- செய்திப் பரிமாற்றம் வளர்ச்சியடைந்தது.


Copyright © Aaruthal 2017 ஊக்கி - 01